# பாடத்திட்டம்

# தமிழ்

# அரசகரும மொழிகள் தேர்ச்சி

# தொகுதி- 4

அரச கரும மொழிகள் திணைக்களம்

**அரசகரும மொழிகள் தேர்ச்சி தொகுதி - 4 பாடப் பரப்பு- தமிழ்**

அறிமுகம்

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக 7/2007 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச உத்தியோகத்தர்களும் அவர்கள் அரச சேவையில் இணைந்து கொண்ட அரசகரும மொழிக்கு மேலதிகமாக உள்ள ஏனைய அரசகரும மொழியில் தேர்ச்சியடைய வேண்டும். அதற்கமைய சிங்கள மொழியினால் அரச சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களால் சித்தியடைய வேண்டிய அரசகரும மொழி தேர்ச்சியின் 4 வது தொகுதியின் தமிழ் பாடத்திட்டத்தின் உள்ளடக்கம் இதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசகரும மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட கல்வியலாளர் குழுவினால் முன்வைக்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் உள்ளடக்கங்களை மீறாமல் அதற்கமைய இப் பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே இரண்டாம் மொழியாக தமிழ் மொழியைக் கற்கும் போது நீங்கள் கையகப்படுத்த வேண்டிய அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பான்மை என்பனவைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இரண்டாம் மொழியைக் கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் மற்றும் கற்கை நெறியின் மதிப்பீடு வழிமுறைகள் இப் பாடத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பாடப் புத்தகம் கற்கைநெறியை செயற்படுத்துவதற்கு வழிக்காட்டலாக இருக்கும். கற்கைநெறியின் கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாடுகளை அதன்படி ஒழுங்கமைத்துக்கொள்ள வேண்டும். அதற்காக இரண்டாம் மொழியினைக் கற்பித்தலுக்கு உரிய பயிற்சியைப் பெற்ற நன்றாக உச்சரிக்கக்கூடிய வளவாளர்களை வழங்குவது பயிலுனர்களுக்கு மிக அவசியமாகும். காரணம் தமிழ் மொழியில் ஒலிகள் மாறும் பொழுது கருத்து மாறிவிடும். ர, ற, ல, ள, ழ, ன, ண ஒலிகளைச் சரியாக உச்சரிக்கக் கூடிய ஆசிரியர்கள் முக்கியம். அது மட்டுமல்ல அ, ஆ, இ, ஈ, உ, எ, ஏ, க, ச, த, ப, ற, ட ஆகிய எழுத்துக்களின் மாற்றொலிகளையும் சரியாக உச்சரிக்கக் கூடிய ஆசிரியர்களால் கற்பிக்கப்பட வேண்டும்

**நோக்கம்**

1. தினமும் எளிமையான கலந்துரையாடல்களில் இணைவதற்காக கேட்டல் மற்றும் பேச்சுத் திறனை மேம்படுத்தல்.
2. நபர் மற்றும் இடப் பெயர்களை வாசிப்பதற்கு வாசிப்புத் திறனை மேம்படுத்தல்.
3. பெயர்கள் மற்றும் முகவரிகளை எழுதுவதற்கு எழுத்துத் திறனை மேம்படுத்தல்.
4. அறிவித்தல்களை வாசித்து **விளங்கும் திறனை மேற் படுத்தல்.**

**அரசகரும மொழிகள் தேர்ச்சி தொகுதி - 4 பாடப் பரப்பு- தமிழ்**

**கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறை**

இரண்டாம் மொழியினைக் கற்பிக்கும் போது விசேடமான கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறைகள் பயன்படுத்தப்படுகிறன. அவ்வாறான விசேட வழிமுறைகளைப் பயன்படுத்திப் பயிலுநர்களுக்கு இரண்டாம் மொழியாக தமிழ் மொழியினைக் கற்பிப்பது பயனுள்ளதாக இருக்கும். கற்கைநெறியினைப் பயிலுவோருக்கு இப் பாடத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாட உள்ளடக்கங்களை வழங்கும்போது பயன்படுத்தக்கூடிய வழிமுறைகள் மற்றும் கற்பிக்கும் உத்திகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. தமிழில் உச்சரிப்பு மாறும் போது கருத்து மாறுபடும். ஆகவே தராதர உச்சரிப்பை ஆசிரியர்கள் கட்டாயம் கற்பிக்க வேண்டும்.

1. நேரடி முறைகள் (Direct method)
2. இலக்கண மொழிபெயர்ப்பு முறை (Grammar translation method)
3. பிரயோக முறை (Applied method)
4. இருமொழி முறை (Bilingual method)
5. எழுத்து வடிவ ஒற்றுமை முறை (Shape similarity method)
6. ஒலிப்பு முறை (Phonetic method)
7. ஒலியுடன் கூடிய மொழி முறை (Audio lingual method)
8. தேர்ந்தெடுக்கப்பட்ட முறைமை/ பன்முக முறை (Eclectic method)
9. புலனுணர்வு சார்ந்த / அறிவாற்றல் (Cognitive method)
10. சூழ்நிலை முறை (Situational method)
11. இயற்கை முறை (Natural method)
12. விகடம் நினைவாற்றல் முறை (Mimicry memorization method)

**அரசகரும மொழிகள் தேர்ச்சி தொகுதி - 4 பாடப் பரப்பு- தமிழ்**

**மதிப்பீடு மற்றும் மதிப்பீடு செயற்பாடு**

அரசகரும மொழி தேர்ச்சியைப் பெறுவதற்கு தொகுதி 4 ஆக தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு 100 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. பாடத்திட்டதிற்கு அமைவாக அரசகரும மொழி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கற்கைநெறியின்போது மதிப்பீடு செயற்பாடு இரண்டு வகையாக நடைபெறும்.

1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.
2. கற்கைநெறியின் இறுதியில் நடைபெறும் மதிப்பீடு.

**1. கற்கைநெறியின் இடையில் நடைபெறும் மதிப்பீடு.**

இங்கு கற்கைநெறியினைப் பயிலுவோர் கற்கைநெறியின் இடையில் அடிக்கடி மதிப்பீடுகளுக்கு உட்படுத்தப்படுவார்கள். தயாரிக்கப்பட்ட மதிப்பீடு சாதனங்களை உபயோகித்து நடாத்தப்படும் மதிப்பீடு செயற்பாடு குறைந்தது 25 மணித்தியாலங்களுக்கு ஒரு முறை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. முன்மாதிரி மதிப்பீடு சாதனங்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும். இதைத் தவிர கற்றல் மற்றும் கற்பிக்கும் செயற்பாட்டின் இடையில் ஆலோசகரினால் கற்கைநெறியினைப் பயிலுவோர் மதிப்பிடப்படுவர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தொடர்ச்சியாக மதிப்பீட்டுச் செயற்பாட்டினால் எதிர்பார்ப்பது கற்கைநெறியினைப் பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேறைப் பெற்றுள்ள மட்டங்களை அறிந்து கொள்ளுவதற்கும் அதற்கமைய அடுத்துவரும் கற்றல் செயற்பாடுகளை ஒழுங்கமைப்பதற்கான வாய்ப்புகளை வழங்குவதற்குமாகும். உத்தேச கற்றல் பெறுபெறுகளைப் பெற்றிராத கற்கைநெறி பயிலுவோரின் உத்தேச கற்றல் பெறுபேறை பெற்றுகொள்ளுவதற்காக தகுந்த நடவடிக்கைகள் ஆலோசகர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகிறது. உத்தேச கற்றல் பெறுபெறுகளை இனங்காண்பதற்குப் பாடத்திட்டத்தில் குறிப்பிடபட்டுள்ள கற்றல் பெறுபெறுகள் வழிகாட்டலாக இருக்கும்.

2. **கற்கைநெறியின் முடிவில் நடைபெறும் மதிப்பீடு**.

இம் மதிப்பீட்டுச் செயற்பாடு இரண்டு கட்டங்களாக நடைபெறும்.

எழுத்துப் பரீட்சை மதிப்பெண்கள் 40% (நேரம் 01 மணித்தியாலம்)
செயன்முறைப் பரீட்சை (வாய்மூல) மதிப்பெண்கள் 60% (நேரம் 30 நிமிடம்)

எழுத்துப் பரீட்சை இலங்கை பரீட்சை திணைக்களத்தினாலும் செயன்முறை பரீட்சை (வாய்மொழி) அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும் நடாத்தப்படும். அரசகரும மொழி தேர்ச்சியில் சித்தியடைவதற்கு எழுத்துப் பரீட்சை மற்றும் வாய்மூல பரீட்சை இரண்டிலும் சித்தியடைவது அவசியமாகும். எழுத்து மற்றும் வாய்மொழி பரீட்சைகளுக்காக பாடத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ள கற்றல் பெறுபேறுகளை அடிப்படயாகக் கொண்டு மதிப்பீட்டுச் கூற்றுகள் தயாரிக்கப்படும். முன் மாதிரி எழுத்து மற்றும் பரீட்சை சாதனங்கள் மற்றும் மதிப்பீட்டுச் பெறுபேறுகள் கூற்றுக்கள் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் வழங்கப்படும்.

**அரசகரும மொழிகள் தேர்ச்சி தொகுதி - 4 பாடப் பரப்பு - தமிழ்**

| அலகு | நோக்கம் | உள்ளடக்கம் | கற்றல் பெறுபேறுகள் | கற்றல் மற்றும் கற்பிக்கும் வழிமுறை | நேரம் (மணித்தியாலம்) |
|---|---|---|---|---|---|
| 1 | 1.1 வினாச் சொற்களைப் பயன்படுத்தி பொருட்கள் பற்றி வினவுவர்<br>1.2 போதும்/ போதாது வேணும்/ வேண்டாம் இருக்கு/ இல்லை சொற்களை வைத்துக் கதைக்கப் பழகுவர்<br>1.3 ஏவல் வினையை அறிவர்<br>1.4 உம் இடைநிலையைப் பயன்படுத்துவர் | • சிற்றுண்டிச் சாலையில் நடைபெற்ற உரையாடல்<br>• வினா வினவுதல்<br>  • என்ன?<br>  • ஆ?<br>• இலக்கம்<br>• போதும்/ போதாது<br>• வேணும்/ வேண்டாம்<br>• இருக்கு/ இல்லை<br>• உம்<br>• ங்கோ/ உங்கோ போன்ற சொற்களைப் பயன்படுத்துதல் | • சிற்றுண்டிச் சாலையில் உரையாடலை பழகுவர்<br>• “என்ன” என்ற வினாச் சொற்களைப் பயன்படுத்தி வினா வினவுவர்<br>• 1- 10 வரையிலான இலக்கங்களைப் பயன்படுத்துவர்.<br>• போதும்/ போதாது, வேணும்/ வேண்டாம், இருக்கு/ இல்லை, உம் என்ற சொற்களை சந்தர்ப்பதிற்கேற்ப பயன்படுத்துவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 03 |
| 2 | 2.1 எழுத்துக்கள் எழுதுவர்<br>2.2 எழுதும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர். | • ட,ப,ம,ய,ச,வ,க,த,அ எழுத்துகளை எழுதுதல்<br>• அவ் எழுத்துக்களைப் பயன்படுத்தி சொற்கள் எழுதுதல் | • ட,ப,ம,ய,ச,வ,க,த,அ ஆகிய எழுத்துக்களைப் பயன்படுத்தி சொற்கள் எழுதுவர் | • எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 02 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 3.1.வாய்மூல வசனங்களை உரிய வகையில் பேச்சில் ஈடுபடுத்துவார்<br>3.2. ஒருவர் ஒருவரை அறிந்து கொள்ளல்<br>3.3. இன்ரை, ரை வேற்றுமை உருபுகளை அறிவர்<br>3.4. மாதங்களின் பெயர்களை அறிவர் | • ஒருவர் ஒருவரை அறிந்து கொள்ளல்<br>• நன்றியைத் தெரிவித்தல்<br>• வேற்றுமை “இன்ரை”<br>• மாதங்களின் பெயர்களைக் கூறுதல் | • ஒருவர் ஒருவரை அறிந்து கொள்ளல் நன்றியைத் தெரிவித்தல்<br>• “இன்ரை” உருபுடன் கூடிய பெயர்ச் சொற்கள் கொண்ட வாக்கியங்களைச் சொல்லுவர்.<br>• வினா சொற்களைப் பயன்படுத்தி மற்றவர்களைப் பற்றி விசாரிப்பர்.<br>• தன்னைப் பற்றிய தகவல்களைக் கூறுவார் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 02 |
| 4. | 4.1 உரிய சொற்களைப் பயன்படுத்தி வழிகளையும் குறியீடுகளையும் கூறுவார்<br>4.2 அங்கை, இஞ்சை, உங்கை சுட்டுப் பெயர்களை வைத்து பேசப்பழகுவர்<br>4.3 க்கு, உக்கு, அக்கு, இலை வேற்றுமை உருபுகளை அறிவர் | • வழி கூறல்<br>• வலதுப்பக்கம் இடதுப்பக்கம், முன், பின்<br>• அங்கை, இஞ்சை, உங்கை, எங்கை?<br>• தான்<br>• சொற்களை வாசிப்பர்<br>• வேற்றுமை க்கு/உக்கு, அக்கு இலைபோன்றவறை அறிதல்<br>• ஏக்கை சொல்லுருபு<br>• எதிர்கால வாக்கியம் அஃறிணையில் பேசப் பழகுதல் | • சரியான வழி குறியீடுகளைக் கூறுவார்<br>• ஏவல் வினையுடய சிறு வாக்கியங்கள் கூறுவர்<br>• அங்கை, இஞ்சை, உங்கை, எங்கை? சொற்களை வைத்து வாக்கியம் அமைப்பர்<br>• -தான் என்ற சொல் உருபை பயன்படுத்துவர்<br>• வினை எச்ச சொல் அமைப்பைப் பின்பற்றி வாக்கியங்களைச் சொல்வர்.<br>• ஏக்கை சொல்லுருபை பயன்படுத்துவர் | • எடுத்துகாட்டல்<br>• பாத்திர நடிப்பு<br>• இருமொழி முறை | 08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | • எதிர்கால வாக்கியம் அஃறிணையில் | | |
| 5 | 5.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>5.2. எழுத்தும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர். | • ர, ற, ல, ள, ழ ஆ எழுத்துக்களை எழுதுதல்<br>• ஆ உயிர்மெய் எழுத்துக்கள்<br>• சொற்கள் எழுதுதல் | • எழுத்துக்களைச் சரியாக எழுதுவர்<br>• ஆ உயிர்மெய் எழுத்துக்கள் எழுதுவர்<br>• சரியாக சொற்களை எழுதுவர் | • எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• செயல்முறை செயற்பாடு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை | 02 |
| 6. | 6.1. உரையாடலின் போது வினை எச்சங்களைப் பயன்படுத்துவர்<br>6.2. சொற்களைப் பயன்படுத்தி தேவைகளைக் கூறுவர்<br>6.3. இலக்கங்களை அறிவர்<br>6.4. நேரத்தைக் கூறுவர்<br>6.5. வார நாட்களை அறிவர்<br>6.6. க்கு, உக்கு, அக்கு, ஐ வேற்றுமை ~~உருபுகளை அறிவர்~~ | • வினா வினவுதல்<br>• எங்கை?<br>• எத்தினை?<br>• என்ன?<br>• வினை எச்சம்<br>• இலக்கம் எழுதுதல்<br>• நேரத்தைக் கூறுதல்<br>• வார நாட்களின் பெயர்கள்<br>• வேற்றுமை க்கு/உக்கு, அக்கு, ஐ போன்றவற்றை வைத்து கதைக்கப் பழகுதல் | • "எத்தினை" "எங்கை" என்ற வினாச் சொற்களை பயன்படுத்தி வினா வினவுவர்<br>• வினை எச்சத்தை பழகுவர்<br>• க்கு/உக்கு, அக்கு, ஐ உருபுடன் கூடிய பெயர்ச் சொற்கள் கொண்ட வாக்கியங்களை சொல்லுவர்.<br>• பெயர் எச்சம் கொண்ட வாக்கியங்களை கூறுவர்.<br>• வார நாட்களின் பெயர்களை கூறுவர்<br>• 11-20 வரையிலான இலக்கங்களைக் கூறுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை | 08 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 7. | 7.1. உரையாடலின் போது வினையடைகளையும் பெயரடைகளையும் பயன்படுத்துவர்<br>7.2. நோய்களைப் பற்றி கூறுவர்<br>7.3. இலக்கம் எழுதுவர் | • "ஆய்", "ஆன" உருபுகளுடைய சொற்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை கூறுதல்<br>• நோய்கள் பற்றி கூறுதல்<br>• செய்து, குடிச்சு வினை எச்சம்<br>• சொற்கள் எழுதுதல்<br>• இலக்கம் எழுதுதல்<br>• (சரியான) பெயரெச்சம்<br>• இலக்கம் 20 - 100 வரை பழகுதல் | • "ஆய்", "ஆன" உருபுகளுடைய சொற்களை பயன்படுத்தி வாக்கியங்களைக் கூறுவர்<br>• 21-100 வரையிலான இலக்கங்களைக் கூறுவர்<br>• செய்து, குடிச்சு போன்ற எச்சங்களைப் பழகுவர்<br>• வருகுது நிகழ்காலச் சொல்லை வைத்துக் கதைக்கப் பழகுவர்<br>• பெயரெச்சம் சரியான என்ற சொல்லை வைத்து வாக்கியம் உருவாக்கிப் பழகுவர்<br>• இலக்கம் 21 -100 வரை பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை | 08 |
| 8. | 8.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>8.2. எழுதும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர்.<br>8.3. சொற்கள் எழுதும் போது உறுப்பைழுத்துக்களைப் பயன்படுத்துவர் | • எழுத்துக்கள் எழுதுதல்<br>• உறுப்பாக எழுத்துக்களையும் சொற்களையும் எழுதுதல்<br>• சொற்களை வாசித்தல்<br>• வருகுது போன்ற நிகழ்காலச் சொற்கள் | • எழுத்துகளைச் சரியாக எழுதுவர் ந, ன, ண, ஞ, ங, இ<br>• சொற்களைச் சரியாக எழுதுவர், உச்சரிக்கப் பழகுவர்<br>• எழுத்துக்களைச் சரியாக எழுதுவர்<br>• உறுப்பெழுத்துக்களைக் கொண்ட சொற்களை எழுதுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• செயல்முறை செயற்பாடு<br>• ஒலிப்பு முறை<br>• குழு முறை | 06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 8.4. அ, ஆ, இ எழுத்துகளின் மாற்றொலிகளை அறிவர் | • அ, ஆ, இ எழுத்துகளின் மாற்றொலிகளை எழுதி உச்சரித்தல்<br>• வைத்தியருடன் நோயாளி கலந்துரையாடல் | • அ, ஆ, இ எழுத்துகளின் மாற்றொலிகளை அறிந்து கொள்வர்<br>• வைத்தியருடன் நோயாளி கலந்துரையாடும் முறையைக் கூறுவர் | | |
| 9. | 9.1. உரையாடலின் போது நிகழ் கால வாக்கியங்களைப் பயன்படுத்துவர் | • நிகழ் கால வினை முற்றுகளுடைய வாக்கியங்களை எழுதுதல்<br>• 101-200 வரையிலான இலக்களை எழுதுதல் | • நிகழ் கால வினை முற்றுகளைச் சரியாகப் பயன்படுத்தி வாக்கியங்களைக் கூறுவர்<br>• எழுத்துகளைச் சரியாக எழுதுவர்<br>• இலக்கங்களைக் கூறுவர் (101-200) | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை<br>• குழு முறை | 08 |
| 10. | 10.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>10.2. எழுத்தும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர்.<br>10.3. ஈ எழுத்தின் மாற்றொலிகளை அறிவர் | • வடமொழி எழுத்துக்களை எழுதுதல்<br>• எழுத்துறுப்புகளுடைய சொற்களை எழுதுதல்<br>• சொற்கள் எழுதுதல்<br>• ஈ எழுத்தின் மாற்றொலிகளை எழுதிப் பேசுதல் | • வடமொழி எழுத்துகளைச் சரியாக எழுதுவர்<br>• ஈ எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரிக்கப் பழகுவர்<br>• சொற்களைச் சரியாக எழுதுவர்<br>• எழுத்துக்களை சரியாக எழுதுவார்<br>• சொற்களை எழுதுவார் | • வினா வினவுதல்<br>• எடுத்துக் காட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை | 03 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 11. | 11.1. உரையாடலின் போது எதிர் கால வாக்கியங்களைப் பயன்படுத்துவர்.<br>11.2. சரளமான வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.<br>11.3. எண்கள் 300- 2000 வரை அறிவர்<br>11.4. வேற்றுமை உருபு ஐ, இலை ஆகியவற்றை அறிவர்<br>11.5. எதிர்காலத்தை அறிவர் | • எதிர் கால வினை முற்றுகளுடைய வாக்கியங்களைக் கூறுதல்<br>• எண்கள் 300- 2000 வரை<br>• வேற்றுமை ஐ, இலை போன்றவற்றைப் பயன்படுத்துதல்<br>• நிகழ் கால அஃறிணை சொற்களைப் பழகுதல்<br>• எதிர்கால சொற்களைக் கூறுதல்<br>• வரை/ ஆல்/ எல்லாம் போன்ற சொற்களை வைத்துக் கதைக்கப் பழகுதல் | • சரளமான அறிவித்தல்களுக்கு உடன் செவிமடுப்பர்<br>• 300 முதல் 2000 வரை சரியாக எண்ணுவார்<br>• நேரத்தைச் சரியாகக் கூறுவார்<br>• சரளமான வாக்கியங்களை வாசிப்பார்.<br>• நிகழ் கால அஃறிணை சொற்களைப் பழகுவர்<br>• எதிர்கால சொற்களை பேசப் பழகுவர்<br>• வேற்றுமை ஐ, இலை உருபுகளை வைத்து வாக்கியங்கள் உருவாக்கப் பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• பயிற்சி முறை<br>• இருமொழி முறை | 11 |
| 12. | 12.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>12.2. எழுத்தும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர்<br>12.3. உ எழுத்தின் மாற்றொலிகளை அறிவர் | • உயிர்மெய் எழுத்துக்கள் உ,ஊ எழுதுதல்<br>• சரியாகச் சொற்களை எழுதுதல்<br>• சொற்களை வாசிப்பர்<br>• உ எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரித்தல் | • உ,ஊ உயிர்மெய் எழுத்துக்களைச் சரியாக எழுதுவார்<br>• சொற்களைச் சரியாக எழுதுவார்<br>• உ எழுத்தின் மாற்றொலிகளை எழுதி உச்சரிக்கப் பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றும முறை<br>• ஒலிப்பு முறை<br>• பயிற்சி முறை | 06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13. | 13.1. பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவித்தல்களுக்குச் செவிமடுத்து அதற்கேற்ப செயற்படுவார்<br>13.2. நாளாந்த தேவைகளை அவசியங்களை நிறைவேற்றிகொள்வதற்காக குறுகிய எழுத்து மொழி வாக்கியங்களை வாசிப்பார்<br>13.3. அட்டை, இட்டை, ஓடை, ஆலை வேற்றுமை உருபுகளை அறிவர்<br>13.4. 3000 க்கு மேல் இலக்கங்களை அறிவர் | • பல்வேறு அறிவித்தல்கள்<br>• ஆலோசனைகளை வாசித்தல்<br>• பெயர்ப் பலகைகள் வாசித்தல்<br>• முகவரியை வாசித்தல்<br>• அட்டை/ இட்டை/ ட்டை, ஆலை/ ஓடை உருபுகளைப் பழகுதல்<br>• கொண்டு<br>• போட்டு<br>• ஆலை<br>• இலக்கம் 3000-10000000 | • அறிவித்தல்களை வாசிப்பார்<br>• ஆலோசனைகளை வாசிப்பார்<br>• பதவிப் பெயர்களைச் சரியாக வாசிப்பார்<br>• பெயர்ப் பலகைகளைச் சரியாக வாசிப்பார்<br>• முகவரியைச் சரியாக வாசிப்பார்<br>• தனது பெயர் மற்றும் முகவரியை சரியாக எழுதுவார்<br>• அட்டை/ இட்டை/ ட்டை, ஆலை/ ஓடை வேற்றுமை உருபுகளைப் பழகுவர்<br>• கொண்டு, போட்டு வினை எச்சங்களைப் பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• பயிற்சி முறை | 10 |
| 14. | 14.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>14.2. எழுதும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர் | • உயிர்மெய் எழுத்துக்கள் (எ,ஏ) எழுதுதல்<br>• எ,ஏ மாற்றொலிகளை அறிந்து கொள்ளல்<br>• எழுத்துறுப்புகளுடைய சொற்களை எழுதுதல்<br>• சொற்கள் எழுதுதல்<br>• சொற்களை வாசிப்பர் | • எழுத்துக்களை சரியாக எழுதுவார்<br>• எ, ஏ உயிர்மெய் எழுத்துக்களை எழுதுவார்<br>• சொற்களை சரியாக எழுதுவார்<br>• எ,ஏ மாற்றொலிகளை அறிந்து கொள்வர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றுமை முறை<br>• ஒலிப்பு முறை<br>• பயிற்சி முறை | 06 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | 15.1. உரையாடலின் போது இறந்த கால வாக்கியங்களைப் பயன்படுத்துவர்.<br>15.2. சரளமான வாக்கியங்களைச் சரியான உச்சரிப்புடன் வாசிப்பார்.<br>15.3. இறந்த காலத்தை அறிவர் | • இறந்த கால வினை முற்றுகளுடைய வாக்கியங்களைக் கூறுதல்<br>• ச்ச்- இன்- ஞ்ச்- ட்- ந்த்- த்- த்த்- ண்ட்- ன் இடைநிலைகளைவைத்து இறந்தகால வாக்கியங்களை அமைத்தல் | • சரளமான அறிவித்தல்களுக்கு உடன் செவிமடுப்பார்<br>• சரளமான வாக்கியங்களை வாசிப்பார்.<br>• ச்ச்- இன்- ஞ்ச்- ட்- ந்த்- த்- த்த்- ண்ட்- ன் இடைநிலைகளை வைத்து இறந்தகால வாக்கியம் அமைத்துக் கதைக்கப் பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• பயிற்சி முறை<br>• இருமொழி முறை | 10 |
| 16. | 16.1. எழுத்துக்கள் எழுதுவர்<br>16.2. எழுதும் திறனை வெளிபடுத்தும் விதமாக சொற்களை எழுதுவர்<br>16.3. க,ச,ப,த,ட மாற்றொலிகளை அறிவர்<br>16.4. இடங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரிவுகள் போன்றவற்றை வாசிப்பர் | • எழுத்துக்கள் எழுதுதல் (ஐ,ஒ,ஓ,ஔ உயிர்மெய்)<br>• உறுப்பெழுத்துக்களை எழுதுதல்<br>• சொற்கள் எழுதுதல்<br>• சொற்களை வாசிப்பர்<br>• க,ச,ப,த,ட மாற்றொலிகளை அறிதல்<br>• இடங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரிவுகளை வாசித்துப் பழகுதல் | • எழுத்துக்களைச் சரியாக எழுதுவார் (ஐ,ஒ,ஓ,ஔ உயிர்மெய் எழுத்துக்கள்)<br>• சொற்களைச் சரியாக எழுதுவார்<br>• க,ச,ப,த,ட மாற்றொலிகளை அறிந்து உச்சரிக்கப் பழகுவர்<br>• இடப் பெயர்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், பிரிவுகளை வாசித்துப் பழகுவர் | • வினா வினவுதல்<br>• எடுத்துகாட்டல்<br>• பின்பற்றல்<br>• பாத்திர நடிப்பு<br>• எழுத்து வடிவ ஒற்றும முறை<br>• ஒலிப்பு முறை<br>• பயிற்சி முறை | 07 |
| மொத்தம் | | | | | 100 |
| | | | | | |